THE TIMES OF INDIA
சமயம்

# பைக்கில் லாரி டியூப் என்னவென்று பார்த்தபோது அதிர்ந்துபோன சேலம் போலீஸ்!

Akash G | Samayam Tamil Updated: 17 Aug 2021, 8:53 am

Subscribe YouTube 184K

192

ஆத்தூர் அருகே கல்பகனூரில் சட்டவிரோதமாக இரு சக்கர வாகனத்தில் லாரி டியூப்கள் மூலம் கள்ளச்சாராயம் கடத்தி வந்த நபர் கைது,...



சேலம் மாவட்டம் ஆத்தூர் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சட்டவிரோதமாக கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்குப் புகார் சென்றது, புகாரின் பேரில் போலீசார் தனிப்படை அமைத்துத் தொடர்ந்து சாராய வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே கல்பகனூர் கிராமத்தில் தனிப்படை போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தை போலீசார் மடக்கிப் பிடித்து சோதனை செய்தனர்.

அந்த இரு சக்கர வாகனத்தில் லாரி டியூப்களில் கள்ளச்சாராயம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் அவர் ஆத்தூரை அடுத்த அட்டவணை கொத்தாம்பாடி பகுதியைச் சார்ந்த மாதேஸ்வரன் மகன் கோபிகிருஷ்ணன் என்பது தெரியவந்தது.

இதையடுத்து தனிப்படை போலீசார் அவரை கைது செய்து ஆத்தூர் ஊரக காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். மேலும் அவர் வைத்திருந்த 120 லிட்டர் கள்ளச் சாராயத்தையும் மற்றும் கள்ளசாரம் கடத்தலுக்குப் பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்து ஊரக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

Source: https://tamil.samayam.com/latest-news/salem/attur-counterfeit-liquor-in-lorry-tube-by-two-wheeler-salem-police-strict-action/articleshow/85390286.cms